சிறுகதைத் திருவிழா



# தாய மடி

அமைதியான ஒரு ஞாயிறு காலை. இறைவனின் புகழ்பாட, திருப்பலி பூசைக்கு வருமாறு அந்தக் கிராமத்தின் மக்களை அழைக்கும் புனித யாக்கோபு தேவாலயத்தின் வெண்கல மணிகள் மங்கலமாக ஒலிக்க ஆரம்பிக்கின்றன.

“ஏலே குருசு, எங்கல போய்த் தொலைஞ்ச? கோயில்ல இரண்டாம் மணியும் அடிச்சாச்சு; நல்ல நாளும், பொழுதும் மறுபடியும் அந்த

**தார்சி எஸ். பெர்னாண்டோ**

நெல்லைச் சீமையின் கடலோர கிராமமான மணப்பாடுதான் தார்சி எஸ். பெர்னாண்டோவின் சொந்த ஊர். லயோலா கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த பின் வங்கிப் பணிக்கு மாறியவர். தற்போது பாங்க் ஆஃப் டோக்கியோ மிட்சுபிஷி வங்கியில் துணைப்பொது மேலாளராக இருக்கிறார். கவிதைகள் 'கணையாழி' உட்பட பலவற்றில் பிரசுரமாகியுள்ளன. இதுதான் இவரது முதல் சிறுகதை.



வேலையத்த மனுஷனோடப் போய் கதைக்க உட்கார்ந்திட்டியா? வந்து காப்பித் தண்ணியைக் குடிச்சிட்டு பூசைக்குப்போற வழியைப் பாருல. இதுவேற, வயசான காலத்துல, இங்கே கிடந்து என் கழுத்தை அறுக்குது. சனியன், செத்தாவது தொலையக் கூடாதா?"

குசினியிலிருந்து மிக்கேலின் மருமகள் சம்மனசுவின், - அவள் பெயருக்குச் சற்றும் பொருத்தமேயில்லாத - ஆக்ரோஷக்குரல் உரத்துக் கேட்கிறது. தாயின் கூச்சலில் மிரண்டுபோய், தன் பாட்டன் மிக்கேலின் மடியிலிருந்து துள்ளிக் குதித்து ஓடிப்போகிறான் அவனது எட்டு வயதுப்பேரன் குருசு. அவளின் குரலில் இருந்த உக்கிரம் தாக்கி இடிந்து போகிறான் மிக்கேல்.

நெடுநெடுவென்று வளர்ந்து எழுபது வயதிலும் வைரம் பாய்ந்த உடல். மருமகளின் தொடர் வசைகளால் உடைந்த கண்ணாடியாய் சிதறிப்போன மனசு. கட்டு மரத் துணையுடன் ஏழு கடலின் அலைகளையும் அடக்கி, வாழ்நாளின் பெரும்பகுதியை இந்த நீர்ப் பரப்பிலேயே கழித்திட்ட இனிய பொழுதுகள், அவன் பாலைவன நெஞ்சில் சோலைப்பசுமையாய் விரிய ஆரம்பிக்கின்றன.

முப்புறமும் நீலக்கடல். நடுவில் உயர்ந்து நிற்கின்ற அழகியதொரு குன்று. அருகில் வானைத் தொட்டு நிற்கின்ற கலங்கரை விளக்கம். அக்குன்றின் மேல் அமைந்துள்ள நானூறாண்டு பழமைக் கோவில். அங்கே எழுந்தருளியிருக்கின்ற திருச்சிலுவை நாதரின் அன்பு அரவணைப்பில் பாதுகாப்பாய் நிற்கின்றது மிக்கேலின் அந்தக் கடற்கரைக் கிராமம்!

சவேரியாளை காதல் கடிமணம் செய்துகொண்டு வாழ்க்கையில் முதல் படி எடுத்துவைத்த நாள் அவன் மனக்கண்ணில் தெரிகிறது. மாமா மகள் எனும் உரிமையும் அவளிடம் காமமற்ற காதல்பட்டு ஒட்டிக் கொண்ட கதை, தொடர் நிலவாக அவன் மனவானில் வலம் வருகிறது. அவைதான் எத்தனை இனிமையான நாட்கள்! இரும்பு போன்ற உரமான கரங்களால் இவன் அவளை அணைக்க, நொறுங்கிப்போய் விடாமல் அவளும் மென்மையான இறகாய் வளைந்து, அவனுடைய ஆங்காரத்திற்கும், ஆண்மையான ஆளுகைக்கும் பாங்காய் ஈடுகொடுத்த ரம்யமான அந்த நாட்கள், அவன் கண்ணைவிட்டு அகல மறுக்கின்றன!

தினமும் அவன் கடலுக்குப்





**இத்தனை மனச் சுமைக்கும் அவனுடைய ஒரே சுமைதாங்கி அருமைப்பேரன் குருசு தான்.**

போய் திரும்பும்வரை, பட்டினியுடன், ஒரு யோகியாய் தன் மிக்கேல் நலமுடன் திரும்பி வருவதற்காக, கர்த்தரின் பெயரை மீண்டும் மீண்டும் அவள் உச்சரித்ததும், அவன் கரை வந்து சேர்ந்த பின்னரே ஒரு பிடி சாதத்தைத் தன் வாயில் போட்டுக் கொண்டதும் இப்போது அவன் நினைவில் வந்து அவன் தொண்டையை அடைக்கிறது. அவனுக்காகப் பசியுடனே இருந்து இருந்து குடல் புண்ணாகி, புரையோடி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், அவன் கடலில் இருந்த ஒரு பொழுதில் அவனைத் தவிக்கவிட்டு அவன் மறைந்துவிட்டதையும் அவன் தன் மனதில் இன்று அசை போட்டுக் கொள்கிறான்.

தன் பேர் சொல்ல, செல்ல மகன் ரப்பேல் பிறந்தபோதுதான் அவனுக்கு எத்தனை பெருமை! ஊரில் இருந்த கன்னியர் நடத்தும் ஆஸ்பத்திரியில், சவேரியாளை சரியான நேரத்தில் கொண்டு சேர்த்து, பின்னர் ரப்பேல் பிறக்கும்வரை குட்டிப் போட்ட பூனையாய் அந்த ஆஸ்பத்திரியை சுற்றிச் சுற்றி வந்தவனின் நெஞ்சில் பால் வார்த்தாள் சவேரியாள், ரப்பேலின் உருவில். இருவரும் பாசத்தைக் கொட்டி, கண்ணாய்க் காத்து வளர்த்த பின்னர், எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாமல், சிலுவைத்திருவிழா காண, பக்கத்து ஊரிலிருந்து வந்திருந்த சம்மனசுவின் மதர்த்த உடம்பால் தன் இதயத்தில் காமப்பட்டு, பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக அவளையே அவன் கட்டிக்கொண்ட பின்னர், மருமகள் சம்மனசுவின் இரும்புப்பிடியில் மாட்டிக்கொண்டு அந்தக் குடும்பத்தில் சுகம், சந்தோஷம் என்ற வார்த்தைகள் முற்றிலும்

## புத்திசாலி!

ரமணா, அலாவுதீன் ஆகிய படங்களில் நடித்த ஆஷிமா தற்போது இந்திப் படங்களில் பிஸியாகியிருக்கிறார். "இந்தியில் பெயர் வாங்கினால் தமிழ்த் தயாரிப்பாளர்கள் ரத்தினக் கம்பளத்துடன் வரவேற்பார்கள்..." என்கிறார் இந்த புத்திசாலி நடிகை!



மறைந்து போய்விட, சோகம் மட்டுமே எல்லோர் நெஞ்சிலும் அப்பிக்கொண்டதை அவன் மனம், நொந்துபோய் மீண்டும் நினைத்துப் பார்க்கிறது.

"கடல்தான் நம் முதல் தாயப்பா! நீயும் என்னோட வந்து இந்தக் கடல் தொழிலைத் தெரிந்துகொண்டு சுகப்படு" என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், பெண்டாட்டியின் பேச்சு கேட்டு, வெள்ளையும் சள்ளையுமாகத் திரிய ஆரம்பித்து, இடையில் தன் சோகம் போக்க சிறுக ஆரம்பித்த குடிப்பழக்கம், பின்னர் மைனர் வீட்டுச் சாராயத்துக்கு முழுமையாய் அவனை அடிமையாக்க, குடலும், ஈரலும் வெந்து தன் இளம் வயதிலேயே மரணத்தைத் தழுவிக்கொண்ட அவன் முடிவும், இவன் நெஞ்சில் இன்று மீண்டும், மீண்டும் நிழலாடுகிறது. ஏற்கெனவே கொடுமைக்காரியான சம்மனசவும், அவன் சாவுக்குப் பின்னர் பெரும் ராட்சசியாகவே ஆகிவிட்ட கொடுமை, மிக்கேலை மிகவே ஆடிப்போகச் செய்துவிட்டது.

வயதாகிவிட்டதால் கடலுக்குப் போக இயலாமல், காலைப்பொழுதை வலை பின்னுவதிலும் மற்றவர்களின் வள்ளத்தையும், கட்டுமரங்களையும் கடலுக்குள் தள்ளிவிடவும், திரும்பி வருபவைகளை கரையில் சேர்க்கவும், அவர்கள் பிடித்துவரும் மீன்களை ஏலம் விடுவதற்கும் உதவிசெய்து, இதன்மூலம் அன்றாடம் கிடைக்கும் பணத்தை அப்படியே மருமகளிடம் கொண்டுவந்து தந்துவிட்டு, ஒரு வாய் காப்பித்தண்ணிக்காக, மிக்கேல் அவளுடைய தயவை நாடி உட்கார்ந்திருக்க வேண்டி வந்தது கொடுமைதான். இத்தனை மனச்சுமைக்கும் அவனுடைய ஒரே சுமைதாங்கி அருமைப்பேரன் குருசுதான். தன் மனைவி சவேரியாளின் முகச்சாயலுடன் தன்மேல் பாசத்தைப் பொழிந்திடும் அவனைக் கொஞ்சுவது ஒன்றுதான் மிக்கேலுக்குக் கிடைத்த மிகப்பெரும் ஆறுதல்.



இத்தனைக் கொடுமைகளையும் மிக்கேல் இதுவரை தாங்கிக் கொண்டு காலம் தள்ளிவிட்டான். காரணம், அவனுடைய சோகங்களை பகிர்ந்துகொள்ளும் தாயாக இதோ அவனுடைய கடல் அன்னை இருந்திருக்கிறாள். ஆனால் இன்று, தனக்கென்று ஒரு இருப்பிடம் இல்லாமல் அனாதை ஆகிவிட்டதாக மிக்கேலின் இதயத்தில் சுருக்கென்று ஓர் உணர்வு.

## 'செல்'லமாய் தூது!

தேஜாஸ்ரீ தனக்குத் தெரிந்த சினிமா வட்டாரப் புள்ளிகளுக்கு செல்ஃபோன் மூலம் எஸ்.எம்.எஸ். வாழ்த்துச் செய்திகள் அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். எல்லாம் சான்ஸ் பிடிக்கத்தான்!





தன் சோகம் உச்சத்தை எட்டுகையில் இந்தக் கடல் அன்னையின் கரையில் காலாற நடப்பது அவன் வழக்கம். எத்தனைக் காலம்தான் இந்த இழப்பையும், நெஞ்சைச் சுட்டுப் பொசுக்கும் தன் மருமகளின் கொடுஞ்சொற்களையும், மானத்தை விட்டு இவன் மனது தாங்கிக்கொள்வது?

அதிலும் இன்று காலையில் அவள் பேசிய பேச்சு! "சனியன் செத்தாவது தொலையக் கூடாதா?" இன்று முதன்முதலாக அவள் வாயிலிருந்து வெளிப்பட்டுவிட்ட இந்த வார்த்தைகள் அவனை முற்றிலும் இடிந்து போகச் செய்துவிடுகிறது. தான் தனித்துப் போய்விட்டதாக முதன்முதலில் உணர ஆரம்பிக்கிறான். யாருக்கும் பாரமாக இருக்க விரும்பாத மிக்கேலால் வேறு என்ன செய்யமுடியும்?

கடற்கரையோரமாய் வேகமாக நடைபோட்டு வருகிறான் அவன். தன் துயருக்கெல்லாம் முடிவாக விடுதலை வேண்டி தன் கடல் தாயிடமே ஓடி வேண்டுதல் வைக்கிறான் மிக்கேல்.

மகனின் ஏக்கமும், சோகமும் தாய்க்குப்புரியாதா என்ன? அமைதியாய் இருந்த கடலோரத்தில் சடுதியில் உயர்ந்து, எழுந்து வருகின்ற இரு பெரும் அலைகள், பரிவுடன் மிக்கேலைத் தம்முடன் சேர்த்து அணைத்துக்கொள்கின்றன. எத்தனையோ பெரும் அலைகளை தன் இரும்புக்கரங்களால் அடக்கி மீண்டிருக்கின்ற மிக்கேல், இப்போது, இயல்பான வாஞ்சையுடன் தன் கடல் தாயின் அலைக்கரங்களைப் பாசத்துடன் பற்றிக்கொள்கிறான்.

மற்றுமொரு குழந்தையின் பாரத்தில் அந்தத் தாயின்மடி கனக்க ஆரம்பிக்கிறது! ●


குமுதம்

**இளமை, புதுமை**
**எதிலும் முதன்மை**

நிறுவிய ஆசிரியர்
எஸ்.ஏ.பி.

கௌரவ பதிப்பாளர்
பி.வி. பார்த்தசாரதி

கௌரவ ஆசிரியர்
டாக்டர். எஸ்.ஏ.பி. ஜவஹர் பழனியப்பன்

பதிப்பாளர், ஆசிரியர்
ராவ்

பொறுப்பாசிரியர்கள்
ப்ரியா கல்யாணராமன்
கிருஷ்ணா டாவின்ஸி
ரஞ்சன்

துணை ஆசிரியர்கள்
இரா. மணிகண்டன்
லேனா தமிழ்வாணன்

உதவி ஆசிரியர்கள்
பெ. கருணாகரன்
சுதீர், கே.என். சிவராமன்

அச்சிட்டவர்
ராவ்

தலைமை நிருபர்
திருவேங்கிமலை சரவணன்

உதவி தலைமை நிருபர்கள்
வி. சந்திரசேகரன், ஏ.ஆர். குமார்,

நிருபர் குழு
ரவிசங்கர், ஆனந்த்

குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட், பழைய எண். 151 புதிய எண்.306, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.



கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை, கட்டுரை முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும், கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. பிரசுரமாகும் கதை, கட்டுரை மற்றும் படைப்புகள் அனைத்திற்கும் பதிப்பாளரே உரிமையாளராவார். மறுபிரசுரம் செய்யவோ, மற்ற வேறு வகையில் படைப்புகளை பயன்படுத்தவோ பதிப்பாளரின் முன் அனுமதி பெற்றே செய்ய வேண்டும்.



கதை, கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி : தபால் பெட்டி எண் : 2592, சென்னை 600 031.

ஃபேக்ஸ் எண் : 26425041
தொலைபேசி எண் : 26422148
இ-மெயில் : kumudam@vsnl.com